**செய்தி வெளியீடு எண்:380** **நாள் : 05.08.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.7.2015 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம் – மரவப்பாளையத்தில் 29 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கைத்தறி நெசவாளர்களின் பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ள பரமத்திவேலூர் குழும பொது வசதி மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், நெசவுத் தொழில் அதிகம் நடைபெறுகின்ற பல்வேறு மாவட்டங்களில் 4 கோடியே 62 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 பொது வசதி மையக் கட்டடங்கள், பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் சேலம் மாநகர் – அஸ்தம்பட்டியில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயக்குநர் அலுவலகக் கட்டடம், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூரில் அமைந்துள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பயிற்சிக் கூடம் மற்றும் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, மண்பாண்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா 4000 ரூபாய் வீதம், 4 கோடியே 89 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்கினார்கள்.

இந்திய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்று விளங்குவதும், நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், மத்திய, மாநில அரசுகளுக்கு கணிசமான வருவாயினை பெற்றுத் தருவதிலும், அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்ற ஜவுளித் தொழிலை மேற்கொண்டு வருகின்ற நெசவாளர்களின் வாழ்வு மேம்பட பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள நெசவாளர்கள், நெசவுக்கு முந்தைய பணிகளான பாவு ஓட்டுதல், கஞ்சி தோய்த்தல், சாயம் தோய்த்தல் போன்ற பணிகளை சிரமமின்றி நேர்த்தியாக செய்வதற்கு ஏதுவாக நாமக்கல் மாவட்டம் – மரவப்பாளையத்தில் 29 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பரமத்திவேலூர் குழும பொது வசதி மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், ஈரோடு மாவட்டம் – முகாசிபிடாரியூர், காஞ்சிக்கோவில், பவானி, அக்கரைதட்டாம்பள்ளி, தாண்டாம்பாளையம், சக்திநகர்–ஆப்பக்கூடல், சென்னிமலை,

தாசப்பக்கவுண்டன் புதூர்; கடலூர் மாவட்டம் – சஞ்சீவராயன்கோயில், புதுப்பேட்டை; தஞ்சாவூர் மாவட்டம் – அய்யம்பேட்டை; அரியலூர் மாவட்டம் – வாரியங்காவல்; மதுரை மாவட்டம் – நிலையூர்; கோயம்புத்தூர் மாவட்டம் – காளிங்கராயன்புதூர்; இராமநாதபுரம் மாவட்டம் – எமனேஸ்வரம் (2 எண்ணிக்கை); கரூர் மாவட்டம் – வெங்கமேடு; தூத்துக்குடி மாவட்டம் – செந்தியம்பாளையம்; காஞ்சிபுரம் மாவட்டம் – காஞ்சிபுரம்; திண்டுக்கல் மாவட்டம் – சின்னாளப்பட்டி; திருப்பூர் மாவட்டம் – கோவில்வழி ஆகிய இடங்களில் 4 கோடியே 62 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 பொது வசதி மையக் கட்டடங்கள்;

முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1979ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பட்டு வளர்ச்சித் துறையின் இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லாததைக் கருத்தில் கொண்டு, 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பில் சேலத்தில், பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டப்படும் என்றும், தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருவதால், பட்டு விவசாயிகளுக்கும், பட்டு வளர்ச்சித் துறையில் பணியாற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் நவீன பட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக ஓசூரில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் கூடுதலாக நவீன பயிற்சிக் கூடங்களும், தங்கும் விடுதியும் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, சேலம் மாநகர் – அஸ்தம்பட்டியில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9049 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், இயக்குநர் அறை, இணை இயக்குநர் அறை, துணை இயக்குநர் அறைகள், அமைச்சுப் பணியாளர்கள் அலுவலகக் கூடம், கணினி அறை, கூட்டரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூரில் அமைந்துள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12667 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், பயிற்சி அறைகள், உணவு அருந்தும் இடம், சமையலறை, கூட்டரங்கம், அலுவலக அறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் நவீன பயிற்சிக் கூடம் மற்றும் தங்கும் விடுதிக் கட்டடங்கள்;

என மொத்தம் 8 கோடியே 56 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பட்டு வளர்ச்சி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மழைக்காலங்களில் மண்பாண்டங்கள் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு அக்காலங்களில் மண்பாண்டம் செய்யும் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதார நிதி உதவியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 4000 ரூபாய் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படும் என்று 2014–2015ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங்களில் தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்படும் மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்தவர்கள், கதர்வாரியத்தின் மண்பாண்டத் தொழிற் கூட்டுறவு சங்கத்தின் கீழ் பதிவு செய்தவர்கள் மற்றும் இத்தொழிலில் ஈடுபட்டு வரும் அனைத்து குடும்பங்களும் பயன்பெறும் வகையில், 12236 மண்பாண்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா 4000 ரூபாய் வீதம், மொத்தம் 4 கோடியே 89 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை வழங்கிடும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 குடும்பங்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகையான 4000 ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் துவக்கி வைக்கப்பட்ட உதவித் தொகை வழங்கும் திட்டங்களின் மொத்த மதிப்பு 13 கோடியே 46 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு ப.மோகன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு பி. தங்கமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் திரு டி.பி.பூனாட்சி, தலைமைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் திரு ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு டி.என்.வெங்கடேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9**